**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**

**OS No. 19/2015**

Deposition of witness for Defense side **DW2**

Name and Age : திருமதி. சமி ஆமினாள் (நில அளவையர்)

Father's/Husband Name :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 20.03.2025

**பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை**

1. நான் இலத்தூர் பிர்கா நில அளவையாராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் செங்கோட்டை வட்டாட்சியர் சாட்சியம் அளிக்க, செங்கோட்டை வட்டாட்சியர் எனக்கு அதிகாரம் அளித்துள்ளார். அதன்படி நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். இலத்தூர் கிராமம் சர்வே எண்.389/7B-க்குரிய வாதி தாக்கல் செய்துள்ள பட்டா மாறுதலுக்கான மனு மற்றும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அடங்கிய கோப்பு உண்மை நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். (**மேற்படி பட்டா மாறுதல் மனுவுடன் கூடிய நடவடிக்கைகள் அடங்கிய கோப்பு எண். TK 8A : 393/1428 ஆவணம் சா.சா.ஆ.1 (Ex.X1) ஆகக் குறியீடு செய்யப்படுகிறது**).

2. சர்வே எண்.389/7B-க்குரிய நான்கு பக்க அளவுகள் பின்வருமாறு; வடதலை 5 (ஐந்து) மீட்டர் (16.5 அடி), தென்தலை 5.4 (ஐந்து புள்ளி நான்கு) மீட்டர் (17.7 அடி), தென்வடல் மேல்தலை 16 (பதினாறு) மீட்டர் (52.5 அடி), தென்வடல் கீழ்த்தலை 15.4 (பதினைந்து புள்ளி நான்கு) மீட்டர் (50.5 அடி) அளவுகள் ஆகும். மேற்படி இடத்தின் மொத்த விஸ்தீரணம் 82 சதுர மீட்டர் (இரண்டு சென்ட் ஆகும்). பட்டா மாறுதல் செய்வதற்கு முன்பு இடத்தை அளவீடு

செய்து மனுதாரரிடம் ஒப்புதல் பெற்று தான் பட்டா மாறுதல் செய்வீர்கள் என்றால் ஆமாம்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

3. நீங்கள் கிழமேல் அளவு எனக் குறிப்பிட்டுள்ளது, அந்த இடத்தில் உள்ள வீட்டின் கிழமேல் அளவைதான் குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் ஆமாம். மேற்படி இடத்தை தொட்டு கீழ்ப்பக்கம் உள்ள காலி இடத்தையும் இந்த வழக்கின் வாதி பிச்சம்மாதான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. அந்த காலி இடத்தையும் சேர்த்து தான் உட்பிரிவு செய்யும்போது அளவீடு செய்திருக்க வேண்டும் என்றும், ஆனால், வீட்டை மட்டும் அளந்து உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் ஆமாம். வீட்டை மட்டும் அளந்துள்ளதால் தவறுதான். மேற்படி விபரம் வாதி பிச்சம்மாலுக்கு தெரியாததால் தான், ஆட்சேபணை கொடுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**மறு விசாரணை**

4. பட்டா மாறுதலுக்கு விண்ணப்பம் செய்த நபரின் ஆவணத்தின்படி இரண்டு சென்ட் இடம்தான் உண்டு என்றால் ஆமாம்.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

SUNIL RAJA MAHALINGAM
Digitally signed by SUNIL RAJA MAHALINGAM
Date: 2025.03.20 07:57:23 +0530

District Munsif cum Judicial Magistrate,
Shenkottai